Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.14/2025

**P.W**.1 (LW1)

| | |
|---|---|
| Name | : திருமதி.பிரியா |
| Father/Husband Name | : திரு, குமார் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2025

முதல் விசாரணை - சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது செய்யூரில் குடியிருந்து கடையில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த குமார் என்னுடைய கணவர் ஆவார்.

2) கடந்த 30.08.2023ம் தேதி காலை 10.15 மணியளவில் என்னுடைய கணவர் குமார் அவரது இரு சக்கர வாகனத்தில் பிள்ளைகளை பள்ளிக்கு விட்டுவிட்டு வீட்டிற்கு வந்துக் கொண்டிருந்த போது மேட்டுமங்களம் அருகே வந்த போது எதிரே வந்த அரசு பேருந்து என் கணவர் வந்த இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. என் கணவருக்கு தலை, கை கால்களில் அடிப்பட்டு அவரை ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். நான் கேள்விப்பட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன். அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். விபத்து குறித்து காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகார் ஆகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் கேள்விப்பட்டு தான் தெரிந்துக் கொண்டேன் என்றாலும் சரிதான்.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.
(Sd)S.Vineeth
J.M./TKM.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.14/2025

**P.W**.2 (LW2)

| | |
|---|---|
| Name | : திரு.ஜெகதீசன் |
| Father/Husband Name | : திரு, முத்து |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2025

முதல் விசாரணை - சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது தாழம்பேட்டில் குடியிருந்து மங்களத்தில் உள்ள வெல்டிங் கடையில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த குமார் என்பவரை எனக்கு தெரியாது.

2) சுமார் 2 வருடத்திற்கு முன்பு காலை 9.20 மணிளவில் நான் கடைக்கு பின்னால் வேலை செய்துக் கொண்டிருந்த போது எனது நண்பரான எபினேசர் என்னிடம் ஒரு நபர் இரு சக்கர வாகனத்தில் சென்றபோது அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார். விபத்து நடந்த இடமான எங்களது கடைக்கு எதிரே நான் சென்று பார்த்தபோது தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. அவரை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் கேள்விப்பட்டு தான்

தெரிந்துக் கொண்டேன் என்றாலும் சரிதான். நான் சென்று பார்த்தபோது விபத்து ஏற்பட்டிருந்தது என்றால் சரிதான்.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.14/2025

**P.W**.3 (LW3)

| | |
|---|---|
| Name | : திரு.எபினேசர் |
| Father/Husband Name | : திரு, எத்திராஜ் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2025

முதல் விசாரணை - சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது முடையூரில் குடியிருந்து மங்களத்தில் உள்ள வெல்டிங் கடையில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த குமார் என்பவரை எனக்கு தெரியாது.

2) சுமார் 2 வருடத்திற்கு முன்பு காலை 9.30 மணிளவில் நான் கடையில் வேலை செய்துக் கொண்டிருந்த போது இறந்துபோன நபர் எங்கள் கடைக்கு எதிரே இரு சக்கர வாகனத்தில் அமர்ந்துக் கொண்டு ஒரு நபருடன் பேசிக் கொண்டிருந்தார். திடீரென்று அவரது இரு சக்கர வாகனத்தை திருப்பியபோது எதிரே வந்த அரசு பேருந்து இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அந்த விபத்தில் இரு சக்கர வாகனம் பேருந்திற்கு அடியில் மாட்டிக் கொண்டது. அந்த நபரையும் இரு சக்கர வாகனத்தையும் நான் தான் வெளியே இழுத்தேன். அந்த நபருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. அவரை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி

வைத்தோம். அந்த நபர் இறந்துவிட்டதாக நான் கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

சம்பவம் நடந்த அன்று இரண்டு நபர்கள் எங்கள் கடையில் வேலை செய்துக் கொண்டிருந்தோம். எங்கள் கடைக்கு அருகே இருந்த கடைகள் விபத்து நடந்த நேரத்தில் திறந்திருக்கவில்லை. விபத்து நடந்த இடமான மங்கலம் சாலை அதிகமாக பொதுமக்கள் நடமாட்டம் உள்ள சாலை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் 4 வழி சந்திப்பு உள்ளது என்றால் சரிதான். இறந்துபோன நபரான குமாரின் வீடு விபத்து நடந்த இடத்திற்கு வலது புறமாக செல்லவேண்டும் என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன குமார் சம்பவ இடத்தில் பேசிக்கொண்டே திடீரென்று வலது புறத்தில் திரும்பியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். இறந்து போன நபரின் கவனக்குறைவினால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த சத்தம் கேட்டு தான் சென்று பார்த்தேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த உடனே அந்த இடத்தில் பொது மக்கள் சுமார் 10 பேர் கூடிவிட்டார்கள் என்றால் சரிதான். மேலே சொன்ன விபரத்தை போலிஸ் விசாரணையில் நான் கூறியுள்ளேன்.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.14/2025

**P.W**.4 (LW6)

| | |
|---|---|
| Name | : திரு.முரளி |
| Father/Husband Name | : திரு, அப்பாதுரை |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2025

முதல் விசாரணை - சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது ஆயப்பாக்கத்தில் குடியிருந்து வெல்டராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த குமார் என்னுடைய மாமா ஆவார்.

2) கடந்த 30.08.2023ம் தேதி காலை 10.15 மணியளவில் என்னுடைய மாமா குமார் அவரது இரு சக்கர வாகனத்தில் அவரது பிள்ளைகளை பள்ளிக்கு விட்டுவிட்டு வீட்டிற்கு வந்துக் கொண்டிருந்த போது மங்களம் சந்திப்பு அருகே வந்த போது எதிரே வந்த அரசு பேருந்து என் மாமா வந்த இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. என் மாமாவிற்கு தலை, கை கால்களில் அடிப்பட்டு அவரை ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். நான் கேள்விப்பட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன். அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலிசார் நடத்திய பிரேத விசாரணையின் போது நான் உடனிருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

விபத்தில் இறந்துபோன நபர் என்னுடைய மாமா என்பதால் நஷ்டஈடு பெறவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் கேள்விப்பட்டு தான் தெரிந்துக் கொண்டேன் என்றாலும் சரிதான்.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.14/2025

**P.W**.5 (LW7)

| | |
|---|---|
| Name | : திரு.பிரசாந்த் |
| Father/Husband Name | : திரு, ஜெயபிரகாஷ் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2025

முதல் விசாரணை - சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது செய்யூரில் குடியிருந்து செய்யூர் தாலுக்கா அலுவலகத்தில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த குமார் என்னுடைய அண்ணன் ஆவார்.

2) கடந்த 30.08.2023ம் தேதி காலை 10.15 மணியளவில் என்னுடைய அண்ணன் குமார் அவரது இரு சக்கர வாகனத்தில் அவரது பிள்ளைகளை பள்ளிக்கு விட்டுவிட்டு வீட்டிற்கு வந்துக் கொண்டிருந்த போது மேட்டு மங்களம் சந்திப்பு அருகே வந்த போது எதிரே வந்த அரசு பேருந்து என் அண்ணன் வந்த இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. என் அண்ணனிற்கு தலை, கை கால்களில் அடிப்பட்டு அவரை ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். நான் கேள்விப்பட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன். அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலிசார் நடத்திய பிரேத விசாரணையின் போது நான் உடனிருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

விபத்தில் இறந்துபோன நபர் என்னுடைய அண்ணன் என்பதால் நஷ்டஈடு பெறவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் கேள்விப்பட்டு தான் தெரிந்துக் கொண்டேன் என்றாலும் சரிதான்.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.
(Sd)S.Vineeth
J.M./TKM.